# ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ

ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು–560003.

# KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD

Malleshwaram, Bengaluru – 560003.

## 2020-21 ಸಾಲಿನ ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆ ಪತ್ರಿಕೆ - 1
## 2020-21 MODEL QUESTION PAPER - 1

| | |
|---|---|
| **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು** | **ವಿಷಯ ಸಂಕೇತ : 10-T** |
| **Subject : FIRST LANGUAGE TAMIL** | **Subject Code : 10-T** |
| **ಅವಧಿ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷ** | **ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100** |
| **Time : 3 hrs. 15 minutes** | **Max. Marks : 100** |

**ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿಗಳಿಗೆ**
**Regular Fresh**

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.

2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.

3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.

4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.

5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

**I.** **கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** **6 x 1 = 6**

1. செய்யுளுக்கே உரியதாய் பொருள் கொண்டு நிற்பது -

   A. உரிச்சொல்

   B. பெயர்ச்சொல்

   C. வினைச்சொல்

   D. தொடர்கள்

2. 'சல சல' என்பது -

   A. தொடை B. அடி

   C. உரிச்சொல் D. இரட்டைக் கிளவி

3. 'மலரடி' பிரிக்கும் முறை -

   A. மலர + டி B. மலர் + அடி

   C. மலர் + இடி D. மலர + நுடி

4. ஆசிரியப்பாவின் ஓசை :

   A. செப்பலோசை B. ஒதலோசை

   C. பாடலோசை D. அகவலோசை

5. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல் -

   A. வெட்சி B. கரந்தை

   C. வஞ்சி D. காஞ்சி

6. பெயரைக் குறிக்கும் சொல் -

   A. இடைச்சொல் B. வினைச்சொல்

   C. பெயர்ச்சொல் D. தொடர் சொல்

**II.** முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக. **4 x 1 = 4**

7. பள்ளி எப்பொழுது திறக்கும் ? : வினாத் தொடர் : : ஆகா! மருந்து கண்டுபிடித்து விட்டார்கள்! : ................

8. உலகப் பொதுமறை : திருக்குறள் : : தெய்வப் புலவர் : ................

9. ஔவைக்குக் கனி கொடுத்தான் : அதியமான் : : முல்லைக்குத் தேர் ஈந்தான் : .................

10. வலிமையால் போர்தொடுத்த வேந்தனை எதிர்த்து வெற்றி கொள்ளுதல் : தும்பை : : குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல் : .................

**III.** ஒரு தொடரில் விடை தருக. **7 x 1 = 7**

11. 'தினம் தினம் என்னுடை நாடே' என்று பாடப்படும் நாடு எது ?

12. தம் மக்களது கைப்பட்ட உணவு எப்படிப்பட்டது ?

13. பிரம்பால் அடிகொடுத்தவர் யார் ?

14. மிருகங்களுக்கு மருத்துவமனை நிறுவிய மன்னன் யார் ?

15. இளைஞனின் நண்பன் எது ?

16. பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு எது ?

17. மோனை நயத்துடன் கூடிய விடுகதை ஒன்றை எழுதுக.

**IV.** மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக. **10 x 2 = 20**

18. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

19. தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினை எழுதுக.

20. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை?

21. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக

.

22. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

23. தீப்பெட்டி ஆபீஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளியது?

24. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

25. அடுக்குத் தொடரை விளக்குக.

26. அடி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

27. செய்யுள் உறுப்புக்கள் யாவை ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக. 4 x 3 = 12**

28. தாய், தந்தை, கொல்லன், அரசன் மற்றும் மகன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழி நின்று விளக்குக.

29. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரைக் கூறுகின்றார் ?

30. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும் ?

31. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக.

**VI. குறிப்பு வரைக. 2 x 3 = 6**

32. திருக்குறள்

33. வைரமுத்து

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3**

34. வேற்றுமை அணி

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. 3 x 3 = 9**

35. ‘‘ஒற்றுமையில்லா மனிதகுலம் உயர்வும் தாழ்வும் வளர்க்குது.’’

36. ‘‘இந்திப்பயிர் செழிக்கத் தமிழ் நீர்தான் தேவை போலும்.’’

37. ‘‘தெருக்களில் பாண்டி விளையாடக்கூட ஒரு பெண் பிள்ளையைக் காணோம்’’.

**IX.** கீழ்வரும் பழமொழியை விளக்குக. 1 x 3 = 3

38. ‘‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’’.

அல்லது

‘‘கூழானாலும் குளித்துக் குடி’’.

**X.** அடிபிறழாமல் எழுதுக. 1 x 4 = 4

39. ‘‘இனிமைத் தமிழ் மொழி’’ - என வரும் பாடல்.

அல்லது

‘‘பட்டங்கள் ஆள்வதும்’’ - என வரும் பாடல்.

**XI.** எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக. 2 x 4 = 8

40. பாண்டியனால் மதுரைச் சொக்கநாதன் பிரம்படிபட்டது ஏன்?

41. சேதுப்பிள்ளையவர்கள் இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம் என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்கவும்.

அல்லது

நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம்?

**XII.** கீழ்வரும் செய்யுளின் பொருளை விளக்கி எழுதுக. 1 x 4 = 4

42. பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்
ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்ப் போவோர்
சொன்ன சொல் கேட்பாரும் என் மக்களே
காற்றையே உண்பாரும் என் மக்களே.

அல்லது

ஏருழுது விதைத்தோர் பயிரறுத்து வியர்த்தோர்

வெய்யிலில் வெந்தழிவோரும் என் மக்களே
வெறுங்கையோடு வந்தோர் பெருமூச்சு விட்டோர்
வாய் வயிற்றைக் கட்டியோரும் என் மக்களே.

**XIII.** பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக.

**2 x 2 = 4**

தொன்றல் அசைந்து வரும் தென் தமிழ் நாட்டில் அமைந்த திருக் குற்றாலம் மலைவளம் படைத்த பழம் பதியாகும். அம் மலையிலே கோங்கும், வேங்கையும், ஓங்கி வளரும். குரவமும், முல்லையும் நறுமணங்கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும் இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச்சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த் திவலைகள் பாலாவி போலப் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். அவ்வருவியில் நீராடி இன்புற்ற மேலை நாட்டுப் பெரியார் ஒருவர் ''இந்நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலைசிறந்தது குற்றால அருவியே எனக் கூறுதல் மிகையாகாது என்று புகழ்ந்துரைத்தார்.

வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால் நலிந்த உடலைத் தேற்றும் நன் மருந்தாகும். திருக் குற்றாலச் சாரலில் வேரிலே பழம் பழத்துத் தூரிலே சுளை வெடிக்கும் குறும்பலாமரம் ஒன்று தொன்று தொட்டு விளங்குகின்றது. திருக்குற்றால மலையில் இந்நாள் இளைஞர்கள் கண்டு இன்புறுகின்ற வானரங்களை அந்நாளில் திருஞான சம்பந்தரும் கண்டார் போலும் அப்பொழுது அவர் அடைந்த உள்ளக்கிளர்ச்சி ஒரு தெள்ளிய பாட்டாயிற்று.

''மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்'' என்னும் தேவாரப் பாட்டில் மந்திகள் வாழைக் குலைகளின் மீது அமர்ந்து வளமான கனிகளை மாந்தும் காட்சி அழகுற மிளிர்கிறது.

வினாக்கள் :

43. (a) குற்றால அருவியின் சிறப்பைப் பற்றி மேலை நாட்டுப் பெரியார் கூறியுள்ளன யாவை ?

(b) திருஞான சம்பந்தர் தேவாரப் பாட்டில் கூறியுள்ள கருத்து யாது ?

**XIV.** மடல் எழுதுக. **1 x 5 = 5**

44. உம் பள்ளிக்கு அருகில் உள்ள தோண்டப்பட்ட சாலையைச் சீர் செய்து தருமாறு மாநகர ஆணையருக்கு மடல் எழுதுக.

அல்லது

ஊர் பொது முடக்கத்தின் போதான உனது அனுபவங்கள் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**XV.** கொடுக்கப் பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. **1 x 5 = 5**

45. ''இயற்கையைப் பாதுகாப்போம்''.

அல்லது

''கொரோனா என்னும் தொற்று''